# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை - 2024 யூலை

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**கண்ணோட்டம்:**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கிய **மூன்று பகுதிகளைக்** கொண்டிருந்தது.

1. **பகுதி A – 20 புள்ளிகளுக்காக** நான்கு (1 - 4) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.
2. **பகுதி B – 30 புள்ளிகளுக்காக** மூன்று (5 - 7) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.
3. **பகுதி C – 50 புள்ளிகளுக்காக** மூன்று (8 - 10) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.

## பகுதி A

### வினா இல. 01

(a) இவ்வினாவானது 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **WOT Ltd** இன் தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை (WCC) கணிப்பிடுவதையும் கம்பனியின் வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்த வேண்டிய இரண்டு தந்திரோபாயங்களை இனங்காண்பதையும் பரீட்சித்திருந்தது.

பரீட்சார்த்திகள் சரியான WCC சூத்திரத்தைக் காட்டி WCC ஐ கணிப்பிட்டிருந்தனர். அதற்கிணங்க, தொக்கு இருப்புக் காலம் மற்றும் வியாபார வருமதிகள் காலம் ஆகியன கணிப்பிடப்பட்டதுடன் வியாபார சென்மதிகள் காலம் சரியாகப் பிரதியிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளால் தொக்கு இருப்புக் காலத்தையும் வியாபார வருமதிகள் கால புரள்வு நாட்களையும் சரியாகக் கணிப்பிட முடியவில்லை.

(b) வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் மோசமான மட்டத்தில் காணப்பட்டது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான WCC ஐக் கணிப்பதற்கும் முயற்சிக்கப் பட்டிருந்தது.

(2) WCC ஐக் கணிப்பிடும்போது வியாபார சென்மதிகள் புரள்வு நாட்களும் வியாபார வருமதிகள் சேகரிப்பு நாட்களும் தொக்கு இருப்பு நாட்களுடன் சேர்க்கப்பட்டிருந்தன.

(3) சராசரியைக் கணிப்பிடுவதற்கு ஆரம்ப மற்றும் இறுதித் தொக்குகள் சரியாகப் பயன்படுத்தப் பட்ட போதிலும் சராசரித் தொக்கினைப் பெற்றுக்கொள்ள மறக்கப்பட்டிருந்தது.

(4) 365 நாட்களைக் கொண்டு பெருக்கியதால் அல்லது நாட்களில் கணக்கிடுவதில் சிரமத்தை எதிர்நோக்கியதால் தடவைகளில் இருந்த வியாபார வருமதிகள் புரள்வு விகிதமானது தவறான முறையில் நாட்களுக்கு மாற்றப்பட்டது.

(5) தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தைக் கணிப்பிடும்போது, சில பரீட்சார்த்திகள் ஆதரவான கணிப்பீடுகளைக் காட்டாது விடையை மாத்திரம் நாட்களில் குறிப்பிட்டிருந்தனர்.

(6) பெரும்பாலானவர்கள் வினாவின் **பகுதி (b)** இற்கு உரிய விடைகளை வழங்கியிருக்க வில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

பரீட்சார்த்திகள் இதேபோன்ற வினாக்களில் பயிற்சி பெற வேண்டும் என்பதுடன் தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலத்தின் கருத்தையும் அதனைக் கணிப்பிடும் முறைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

## வினா இல. 02

இவ்வினா எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்தி, 2024 மே 31 இல் முடிவடையும் மாதத்திற்கான வருமானக் கூற்றைத் தயாரிக்குமாறு கேட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) அதிகளவான பரீட்சார்த்திகளுக்கு விற்பனை வருமானத்தைச் சரியாகக் கணிப்பிட முடியவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் விற்பனை வருமானத்தைக் கணிப்பிடுவதற்கு பாதிடப்பட்ட விற்பனை அலகுகளை எடுத்திருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் கணிப்பீட்டிற்கான உண்மையான மற்றும் பாதிடப்பட்ட பெறுமானங்கள் தொடர்பில் குழப்பமடைந்திருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் எல்லைக் கிரயமிடல் எண்ணக்கரு பற்றிக் குழப்பமடைந்திருந்தனர். சிலர் பங்களிப்பைக் கணிப்பிடும்போது நிலையான கிரயத்தைப் பிழையாகக் கழித்திருந்தனர்.

(4) ஆரம்ப மற்றும் இறுதி இருப்புப் பெறுமதிகள் வருமானக் கூற்றில் காட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக எல்லைக் கிரயத்திலுள்ள விற்பனை அலகுகள், மாறும் விற்பனை அலகுகளாக நேரடியாக எடுக்கப்பட்டிருந்தன. இதனால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

(5) உண்மையான நிலையான மேந்தலைகளுக்குப் பதிலாக பாதிடப்பட்ட நிலையான மேந்தலைகள் வருமானக் கூற்றில் எடுக்கப்பட்டிருந்தன.

(6) சில பரீட்சார்த்திகள் எல்லைக் கிரயமிடல் முறைக்குச் சம்பந்தமற்ற குறைந்த / மேலதிக உறிஞ்சலையும் கூற்றில் காட்டியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கு இதே மாதிரியான வினாக்களில் பயிற்சி பெறுதல் வேண்டும்.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகமான மட்டத்தில் காணப்படவில்லை.

## வினா இல. 03

இவ்வினா 2025 ஆம் ஆண்டிற்கான உற்பத்திப் பாதீட்டை அலகுகளில் தயாரிக்குமாறும் பாதீட்டுச் செயன்முறையின் இரண்டு நோக்கங்களை அடையாளங் காணுமாறும் கேட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) பரீட்சார்த்திகள் 2025 ஆம் ஆண்டிற்கான புதிய விற்பனை அலகுகளைக் கணிப்பிட்டிருந்தனர் எனினும், பாதிடப்பட்ட உற்பத்தி அலகுகளை கணிப்பிடும்போது முற்றாகப் பிழையானவாறு அலகுகளில் இருந்த ஆரம்ப இருப்பை சேர்த்தும் இறுதி இருப்பை கழித்தும் இருந்தனர்.

(2) உற்பத்தி அலகுகளை எவ்வாறு கணக்கிடுவது என்பது பற்றிய அறிவு காணப்படாததை விடைகளில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(3) பயிற்சி போதாமல் இருந்ததை இந்த வினாவில் காண முடிந்தது.

(4) உற்பத்தி அலகுகளைக் கணிக்கும்போது ஆரம்ப இருப்பைச் சேர்த்தும் இறுதி இருப்பை கழித்தும் எழுதியிருந்தனர்.

(5) பெரும்பாலான பரீட்சார்த்திகளின் விடைகள் இவ்வினாவுக்கு திருப்திகரமானதாக அமைந்திருந்தன.

(6) ஆனால் சில பரீட்சார்த்திகள் 2024 இன் விற்பனைப் பெறுமதியை சரியாகக் கணித்திருக்கவில்லை.

(7) உற்பத்திப் பாதீட்டைக் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகள் இருப்புச் சீராக்கத்தைப் பிழையாகச் செய்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

இதேபோன்ற வினாக்களில் பயிற்சி பெறுவதுடன் பாதிடப்பட்ட உற்பத்தி அலகுகளைத் தயாரிக்கின்ற அடிப்படைகளை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

## வினா இல. 04

இவ்வினா புதிய சேவைநாடுநரின் செயற்றிட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமா என்பதை மதிப்பிடுமாறு கேட்டிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் செயற்றிட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமா, வேண்டாமா என்பதை மதிப்பிடுவதற்கான அனைத்து சம்பந்தப்பட்ட கிரயங்களையும் காட்டி, புள்ளிகளை ஈட்டியிருந்தனர்.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) செயற்றிட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலோ, இல்லையோ நிலையான சம்பளம் செலுத்தப்படும் என வினாவில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும் நிலையான சம்பளமானது ஒரு சம்பந்தப்பட்ட கிரயமாக எடுக்கப்பட்டிருந்தது.

(2) தங்குமிடச் செலவினங்கள் என்பது ஒரு மாதாந்தக் கொடுப்பனவாக இருப்பதுடன் அவை மாத ஆரம்பத்தில் செலுத்தப்பட வேண்டும் என வினாவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 6 வாரங்களுக்கான தங்குமிடச் செலவினங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

(3) ஆரம்பகட்ட கள விஜயத்திற்கான கிரயம் ரூபா 300,000/- சம்பந்தப்பட்ட கிரயமாக கவனத்திற் கொள்ளப்பட்டமை.

(4) செயற்றிட்டத்தை மதிப்பிடும்போது செயற்றிட்டக் கட்டணம் ரூபா 3.5 மில்லியனைக் காட்டாமை.

(5) செயற்றிட்ட மதிப்பீட்டு வடிவத்தில் இச்செயற்றிட்டத்தை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பதை மதிப்பிடுதல்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

விபரமான கிரயங்கள் மற்றும் வருமானத்துடன் விடையைச் சமர்ப்பிப்பதற்கு பரீட்சார்த்திகள் பயிற்சி பெற வேண்டும்.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

## பகுதி B

### வினா இல. 05

இவ்வினா **பேர்னிச்சர் லிமிட்டெட்** கம்பனிக்காக 2024 ஆகஸ்ட், செப்ரெம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது.

பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட மாதங்களுக்கான அனைத்து செலவினங்களையும் சரியாக இனங்கண்டிருந்ததுடன் ஆரம்ப காசு மீதியையும் சரியாகக் காட்டியிருந்தனர். பெறப்பட்ட முற்பணத்திலிருந்தான காசுப் பாய்வும் பூர்த்தியின் மீதான மீதிக் கொடுப்பனவும் பல பரீட்சார்த்திகளாலும் சரியாக இனங்காணப்பட்டிருந்தது. கட்டளை ஆரம்ப மாதமும் பூர்த்தி மாதமும் வினாவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒரு சில பரீட்சார்த்திகள் பூர்த்தியின் மீதான மீதிக் கொடுப்பனவு பற்றி குழம்பியிருந்தனர்.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) சில பரீட்சார்த்திகள் இறுதி காசு மீதியைக் காட்டியிருக்கவில்லை.

(2) பல பரீட்சார்த்திகள் காசுப் பாதீட்டிலுள்ள ரூபா 8 மில்லியன் பெறுமதியான இயந்திரக் கொள்வனவைக் காட்டுவதற்கு மறந்திருந்தனர்.

(3) நிலையான செலவினங்கள் தேய்மானத்தை உள்ளடக்கவில்லை எனத் தரப்பட்ட போதிலும் தேய்மானத்தை காசுப் பாதீட்டில் காட்டியிருந்தனர்.

(4) அதிகளவான பரீட்சார்த்திகள் 5% வருடாந்த வீதத்தைப் பயன்படுத்தி வட்டி வருமானத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். ஆனால் உரிய மாதங்களுக்கான மாதாந்த வட்டி வருமானத்தைக் காட்டுவதற்கு அதனைப் 12 இனால் பிரிப்பதற்குத் தவறியிருந்தனர்.

(5) சில பரீட்சார்த்திகள் இறுதிக் காசு மீதியை கணிப்பிட்டிருக்கவில்லை.

(6) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வட்டி வருமானத்தை இனங்காணத் தவறியிருந்தனர்.

(7) சில பரீட்சார்த்திகள் சகல மூன்று மாதங்களுக்குமான நிலையான சொத்துக்களின் கொள்வனவைப் பிழையாகக் காட்டியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
- சுய கற்றல் புத்தகத்திலுள்ள வினாக்கள் மற்றும் விடைகளில் பயிற்சி பெறவும்.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

## வினா இல. 06

இவ்வினா கீழ்வருவனவற்றின் கணிப்பீடுகளைப் பரீட்சித்திருந்தது.

**(a)** சாதாரண பங்குகளின் கிரயம்,

**(b)** மீட்கப்படமுடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம்,

**(c)** மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம்,

**(d)** நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC) – சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி.

சந்தை விலையை தொகுதி எண்ணாகவும் பங்கிலாபத்தை பகுதி எண்ணாகவும் கருதி கணிப்பீட்டை மேற்கொண்ட ஒரு சிலரைத் தவிர பெருமளவான பரீட்சார்த்திகள் சாதாரண பங்குகளின் கிரயத்தை நன்றாகக் கணிப்பிட்டிருந்தனர்.

வட்டிக் கொடுப்பனவுக்குப் பின்னரான வரியை இனங்கண்டதன் மூலம் மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயத்திற்கான கணிப்பீட்டை பரீட்சார்த்திகள் சரியாகச் செய்திருந்தனர் ஆயினும் சிலர் தனிச்ச வழங்கலின் ஆரம்ப ஆண்டிலும் தனிச்சங்கள் மீட்கப்படும் இறுதி ஆண்டிலும் உள்ள காசு வெளிப்பாய்வு / உட்பாய்வினை சரியாக இனங்காணாது குழம்பியிருந்தமை அவர்களிடம் அது தொடர்பான போதிய அறிவு காணப்படாமையையே காட்டுகிறது.

ஆனால் இரண்டு கழிவிடல் வீதங்களிலும் கணிப்பிடப்பட்ட நிகர இற்றைப் பெறுமதிகளும் IRR (உள்ளக வருவாய் வீதம்) ஐக் கணிப்பிடும்போது சரியாகப் பிரயோகிக்கப்பட்டன.

மேலும், WACC ஆனது சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி சரியாகக் கணிப்பிடப்படவில்லை. நடப்பு வியாபார விலை (சந்தை விலை) ஆனது வினாவில் தரப்பட்டிருந்த போதிலும் மீட்கத்தக்க தனிச்சங்களின் சந்தைப் பெறுமதியைக் கணிப்பதில் பரீட்சார்த்திகள் இடர்பாடுகளைச் சந்தித்திருந்தனர்.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) சில பரீட்சார்த்திகள் பங்கிலாப வளர்ச்சி மாதிரியைப் பயன்படுத்தி சாதாரண பங்குகளின் கிரயத்திற்கான சூத்திரத்தைச் சரியாக எழுதியிருந்தனர். ஆயினும், அவர்களிடம் போதியளவான கணித அறிவு காணப்படாததால் அந்தச் சூத்திரத்தைச் சரியாகத் தீர்ப்பதற்குத் தவறியிருந்தனர்.

(2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் சாதாரண பங்குகளின் கிரயத்தைக் கணிப்பிடும்போது வளர்ச்சி வீதத்தைக் கவனத்திற் கொண்டிருக்கவில்லை.

(3) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயத்தைக் கணிப்பிடும்போது ஆரம்ப ஆண்டிலும் இறுதி ஆண்டிலும் உள்ள காசு வெளிப்பாய்வு / உட்பாய்வுகளை சரியாகக் காட்டியிருக்கவில்லை.

(4) சாதாரண வாக்குரிமைப் பங்குகள் மற்றும் மீட்கத்தக்க தனிச்சங்களின் சந்தைப் பெறுமதியைக் கணிப்பிடுவதில் சிரமப்பட்டிருந்தனர்.

(5) 16% மீட்கத்தக்க தனிச்ச வட்டிக் கிரயத்திற்குப் பதிலாக, சில பரீட்சார்த்திகள் வினாத்தாளில் வழங்கப்படாத வெவ்வேறு வட்டிக் கிரயங்களைப் பயன்படுத்தியிருந்தனர்.

(6) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயத்தைக் கணிப்பிடும்போது ஆரம்ப ஆண்டிலும் இறுதி ஆண்டிலும் உள்ள காசு வெளிப்பாய்வு / உட்பாய்வுகளை பல பரீட்சார்த்திகள் இனங்கண்டிருக்கவில்லை.

(7) சில பரீட்சார்த்திகள் WACC இற்கான சந்தைப் பெறுமதியைக் கணிப்பிடுவதில் தவறுகள் விட்டிருந்தனர்.

(8) சிலர் சந்தைப் பெறுமதிக்குப் பதிலாக புத்தகப் பெறுமதியைப் பயன்படுத்தி WACC ஐக் கணிப்பிட்டிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட வில்லை.

## வினா இல. 07

இவ்வினா கீழ்வருவனவற்றின் கணிப்பீடுகளைப் பரீட்சித்திருந்தது.

(a) வினாவில் தரப்பட்ட வரையறுக்கப்பட்ட வளங்களின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவை,

(b) பொருள் A இன் ஒரு கிலோகிராமிற்காகச் செலுத்த வேண்டிய உயர்ந்தபட்ச விலை – நியாயப் படுத்தலுடன்.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) உத்தம உற்பத்திக் கலவையைக் கணிப்பிடுவதற்கு வரையறைக் காரணியொன்றின் பங்களிப்பு மற்றும் அடுத்தடுத்த படிமுறைகளை சரியாக இனங்கண்டதன் மூலம் பரீட்சார்த்திகள் அவர்களது திறமையைக் காட்டியிருந்தனர்.

(2) எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் உத்தம உற்பத்திக் கலவையைக் கணிப்பிடும்போது ஒவ்வொரு அளவு தலையணையினதும் மொத்தப் பங்களிப்பு மற்றும் அடுத்தடுத்த படிமுறைகள் ஆகியவற்றைக் கணிப்பிட்டிருந்தனர். அவர்கள் எந்தவொரு புள்ளியையும் பெற்றுக்கொள்ள வில்லை.

(3) **பகுதி (b)** இற்கு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியாக விடையளித்திருந்தனர். சிலர் செலுத்த வேண்டிய உயர்ந்தபட்ச விலையைக் கணிப்பதற்கு பொருள் A இன் ஒரு கிலோகிராமிற்கான கிரயமான ரூபா 1,100/- உடன் வரையறைக் காரணி ஒன்றின் பங்களிப்பான ரூபா 246.25 இனைச் சேர்த்து நேரடியாகவே ரூபா 1,246.25 எனப் பெற்றிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் விற்பனை விலைக்கு எதிராக, சாதாரண அளவு தலையணைக்கான **பொருள் A** இன் கிரயம் தவிர்ந்த ஏனைய அனைத்துச் செலவினங்களையும் சேர்த்திருந்ததுடன், அத்தொகையை 4 இனால் வகுத்து, **பொருள் A** இன் ஒரு கிலோகிராமிற்கு செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச விலையை கண்டறிந்தனர்.

(5) எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் **பொருள் A** பற்றாக்குறையானது சாதாரண அளவு தலையணைகளின் 1,250 அலகுகள் அல்லது 5,000 kg எனக் கணிப்பிட்டிருந்ததுடன் மேலதிக கணிப்பீடுகளை அவர்கள் மேற்கொள்ளவில்லை.

(6) **பகுதி (a)** இற்கான விடை திருப்திகரமாக இருந்த போதிலும் **பகுதி (b)** இற்கான விடை மிகவும் மோசமானதாக இருந்தது. இது அவர்களிடம் கோட்பாட்டுரீதியான அறிவு காணப்படாததைக் காட்டுகிறது.

(7) சில பரீட்சார்த்திகள் வரையறைக் காரணி மற்றும் உத்தம உற்பத்திக் கலவை ஆகியவற்றுக்கான அலகொன்றின் பங்களிப்பை பிழையாகப் பயன்படுத்தியிருந்தனர்.

(8) சில பரீட்சார்த்திகள் வரையறைக் காரணிக்கான kg ஒன்றிற்கான பங்களிப்பைக் கணிக்கும் போது, தவறாக அலகொன்றிற்கான kg இன் எண்ணிக்கையினால் அலகொன்றின் பங்களிப்பை பெருக்கியிருந்தனர்.

(9) சிலர் உத்தம உற்பத்திக் கலவையைக் குறிப்பிட்டிருக்கவில்லை.

(10) சில பரீட்சார்த்திகள் kg ஒன்றிற்கான பங்களிப்பைக் கணிப்பிட்டிருந்ததுடன் பங்களிப்பின் அடிப்படையில் மாத்திரம் வெறுமனே தரப்படுத்தியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

அலகொன்றிற்கான பங்களிப்பு, வரையறைக் காரணியொன்றிற்கான பங்களிப்பு ஆகியவற்றை எவ்வாறு துணிவது என்பது பற்றியும் வரையறைக் காரணியை அடிப்படையாகக் கொண்டு உத்தம உற்பத்திக் கலவையை கணிப்பிடுவது பற்றியும் ஏதாவது மாறும் கிரயத்தின் உயர்ந்தபட்ச விலையை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றியும் தேடியறிவதற்கு கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட வில்லை.

## <u>பகுதி C</u>

### வினா இல. 08

இவ்வினா சமான அலகுகள் கூற்றையும் **செயன்முறை 3** கணக்கையும் தயாரிக்குமாறு கேட்டிருந்தது.

**செயன்முறை 3** கணக்கைத் தயாரித்ததன் மூலம் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவு போதுமானவையாக இருக்கவில்லை, விசேடமாக அசாதாரண நட்டத்திற்கான சமான அலகுகளைக் கணிப்பதில் போதிய அறிவு காணப்படவில்லை.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) சில பரீட்சார்த்திகள் வினாவில் வழங்கப்பட்ட பெறுமானங்களைக் கொண்டு செயன்முறைக் கணக்கையும் சமான அலகுகள் கூற்றையும் தயாரித்திருந்த போதிலும், மேலதிக கணிப்பீடு களைத் தொடர்ந்திருக்கவில்லை.

(2) பரீட்சார்த்திகள் சமான அலகுகள் கூற்றைத் தயாரிக்கும்போதான கணிப்பீடுகளின்போது ஆரம்ப புத்துருவாகும் வேலை அலகுகளைக் காட்டியிருந்தனர்.

(3) சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதியானது சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைத் தயாரிக்கும்போது கழிப்பனவு செய்யப்படவில்லை அல்லது அது பொருள், கூலி மற்றும் மேந்தலைகள் ஆகிய சகல மூன்று கிரயக் கணிப்பீடுகளிலிருந்தும் கழிப்பனவு செய்யப் பட்டிருந்தது.

(4) சில பரீட்சார்த்திகள் சமான அலகுகளைக் கணிப்பிடும்போது சாதாரண நட்டத்தை சீராக்கம் செய்திருந்தனர்.

(5) உரிய அலகுகளுக்குச் சமானமான மொத்தக் கிரயத்தை இனங்காணும்போது ஆரம்ப புத்துருவாகும் வேலைகளின் பெறுமதி கணிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் பெறுமதிகள் மற்றும் அளவுகள் இரண்டையும் காட்டி, செயன்முறை 3 கணக்கைத் தயாரிப்பதற்குத் தவறியிருந்தனர். அவர்கள் பெறுமதிகளையோ அல்லது அளவுகளையோ மாத்திரமே பயன்படுத்தியிருந்தனர்.

(7) செயன்முறை 3 கணக்கு, அசாதாரண நட்டம் ஆகியவற்றின் பெறுமதிகளுடன் தொடர்புடைய செய்முறைகள் காட்டப்படவில்லை.

(8) சமான அலகுகளைக் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகள் சாதாரண நட்டத்தை கவனத்திற் கொண்டிருந்தனர்.

(9) சில பரீட்சார்த்திகள் அலகுக் கிரயத்தைக் கணிக்கும்போது, நேர் பொருள் கிரயத்திலிருந்து சாதாரண நட்டத்தின் விற்பனைப் பெறுமதியைக் கழிப்பதைக் கவனத்திற் கொள்ளவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

(1) பரீட்சார்த்திகள் இதே மாதிரியான வினாக்களைப் பயிற்சி செய்தல் வேண்டும்.

(2) சுய கற்றல் புத்தகத்திலுள்ள சம்பந்தப்பட்ட அத்தியாயங்களை முறையாக வாசிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

## வினா இல. 09

இவ்வினா தற்போதுள்ள இயந்திரத்தைத் திருத்தியமைப்பதன் நிகர இற்றைப் பெறுமதியின் (NPV) கணிப்பீட்டைப் பரீட்சித்திருந்ததுடன் இயந்திரத் திருத்தியமைப்பின் சாத்தியத்தன்மையை மதிப்பிடுமாறும் கேட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) தரப்பட்ட பணவீக்க அதிகரிப்புடன் வருடாந்த விற்பனைத் தொகைகள் மற்றும் மாறும் உற்பத்திக் கிரயம் ஆகியன சரியாகக் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. இது விற்பனைத் தரகுக்கான கணிப்பீடுகளிலும்கூட தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

(2) நிலையான கிரயம் தேய்மானத்தை உள்ளடக்கவில்லை என்ற போதிலும் தேய்மானம் செயற்றிட்ட மதிப்பீட்டில் காட்டப்பட்டுள்ளது. சந்தைப்படுத்தல் செலவினங்கள் ஆண்டு 1 இற்குப் பதிலாக ஆண்டு 2 இல் காட்டப்பட்டிருந்தன.

(3) செயற்றிட்டத்தின் முடிவில் இயந்திரத்தின் ஈற்றுப் பெறுமதி / தொழிற்படு மூலதன மீள்பெறுகை யானது தவிர்க்கப்பட்டிருந்தது.

(4) ஒவ்வொரு ஆண்டிற்குமான பங்களிப்பானது, அது எவ்வாறு பெறப்பட்டது என்பதைக் காட்டுகின்ற எந்தவொரு விபரமான செய்முறைகளுமின்றி காட்டப்பட்டுள்ளது.

(5) 5 ஆண்டிற்கான மூலதன விடுதொகை கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(6) கம்பனியின் கழிவிடல் காரணி (மூலதனக் கிரயம்) 15% ஆகும். ஆனால் சில பரீட்சார்த்திகள் 10% போன்ற தவறான வீதங்களை கம்பனியின் மூலதனக் கிரயமாகப் பயன்படுத்தியிருந்தனர்.

(7) மூலதன விடுதொகைகள் ஒரு செயற்றிட்ட மதிப்பீட்டின் காசுப் பாய்வினது ஒரு பகுதியன்று. ஆனால் பல பரீட்சார்த்திகள் செயற்றிட்ட மதிப்பீட்டில் அவற்றை எடுத்திருந்தனர்.

(8) கணக்கீட்டு இலாபம் வரிவிதிக்கத்தக்க இலாபமாக எடுக்கப்பட்டிருந்தது.

(9) சில பரீட்சார்த்திகள் ஆண்டு 0 இற்கு ஈற்றுப் பெறுமதியாக ரூபா 5,000,000/- இனைப் பதிவு செய்திருந்தனர்.

(10) சில பரீட்சார்த்திகள் தேய்மானம் மற்றும் மூலதன விடுதொகைகளை காசு வெளிப்பாய்வாக பிழையாகக் கருதியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

(1) கடந்தகால வினாத்தாள்களிலுள்ள இதே மாதிரியான வினாக்களில் பயிற்சி பெறவும்.

(2) கழிவிடல் நோக்கங்களுக்காக வினாவில் தரப்படும் மூலதனக் கிரயத்தையே (கழிவிடல் காரணி) பயன்படுத்தவும்.

(3) கணக்கீட்டு இலாபத்திற்கும் வரிவிதிக்கத்தக்க இலாபத்திற்குமிடையேயான வேறுபாட்டை விளங்கிக் கொள்ள வேண்டும்.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

**வினா இல. 10**

இவ்வினா, கணிப்பீட்டின் மூலம் முரண்களைப் பகுப்பாய்வு செய்யும் அறிவைப் பரீட்சித்தது.

**பகுதி (A)**

**(a)** நேர் பொருள் விலை முரண்.

**(b)** நேர் பொருள் கலவை முரண்.

**(c)** நேர் பொருள் விளைவு முரண்.

**(d)** நேர் கூலி வீத முரண்.

**(e)** நேர் கூலி வினைத்திறன் முரண்.

**(f)** நிலையான மேந்தலை செலவின முரண்.

**பகுதி (B)**

இங்கு, மூன்று பொருள்களுக்கான இலாப – நட்டமற்ற புள்ளியை (BEP) அலகுகளில் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் முரண்களை சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. பொருள் கலவை, விளைவு முரண் மற்றும் கூலி வினைத்திறன் ஆகியவற்றின் கணிப்பீடு மிகவும் மோசமாக இருந்தது.

(2) அதிகளவான பரீட்சார்த்திகளிடம் முரண்களைக் கணிப்பிடுவதற்கான சூத்திரம் பற்றிய அறிவு காணப்படவில்லை.

(3) சில பரீட்சார்த்திகளுக்கு சூத்திரங்கள் பற்றித் தெரிந்திருந்தபோதும், அவர்கள் சூத்திரத்தில் தரவுகளைச் சரியாகப் பிரயோகித்திருக்கவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் முரண்களில் பாதகமானதா, சாதகமானதா என்பதைக் குறிப்பிடவில்லை.

(5) சிலர் பிழையாக சாதகமானதை பாதகமானது எனவும் பாதகமானதை சாதகமானது எனவும் இனங்கண்டிருந்தனர்.

(6) மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே வினாவின் பகுதி B இற்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். எவரும் இணைந்த CS/PV விகிதத்தைச் சரியாகக் கணிப்பிடவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

(1) கடந்தகால வினாத்தாள்களிலுள்ள இதே மாதிரியான வினாக்களில் பயிற்சி பெறவும்.

(2) முன்னைய வினாவுக்கான விடையானது ஒரு தாளின் நடுப்பகுதியில் நிறைவடைந்தாலும்கூட அடுத்த புதிய வினாவுக்கான விடையை எப்போதும் அடுத்த புதிய பக்கத்திலேயே வழங்க ஆரம்பிக்கவும்.

(3) வினா இலக்கத்தை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் தெளிவாகக் குறிப்பிடவும்.

(4) விடைகளின் செய்முறைகளைத் தெளிவாகக் காட்டுவது புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவும்.

**செயலாற்றுகை :** இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

- * * * -